ஒரு ஃப்ளோர் பிரைஸ் போட்ட காரணத்தால் தங்களைப் பாதிக் கிறது என்றார்கள். பிறகு மத்திய அரசுக்கு அனுப்பினோம். மத்திய அரசும் காம்ப்ரமைஸ் ஃபார்முலா முறையில் முடிவு எடுக்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

Sheriff of Madras

* 227 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the grounds on which the selection is made for the post of Sheriff of Madras?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 'மாநகரின் முதல் குடிமகன்' என்று அழைக்கப்படக்கூடிய தகுதி பெற்றவரும், நல்ல பதவியிலும், நிலைமையிலும் உள்ளவருமான ஒருவரை "ஷெரிப்" ஆக நியமிக்கத் தேர்ந்தெடுப்பதே இதுவரையிலும் நடைமுறையில் இருந்து வருகிற ஒரு மரபு ஆகும். அரசுப் பணியில் உள்ளவர்கள், ராணுவப் பணியில் உள்ளவர்கள், வழக்குரைஞர் தொழில் புரிபவர் ஆகியோர் நியமனத்திற்காகக் கருதிப் பார்க்கப்படுவதில்லை. தனியார் நிறுவனங் களில் பணியாற்றி ஊதியம் பெறுபவர்கள் நியமனத்திற்காகக் கருதி பார்க்கப்படுகின்றனர். மகளிரும், ஷெரிபாக நியமிக்கத் தகுதி பெற்றவராவர். இந்தப் பதவி கௌரவப் பதவியாகும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த ஷெரிப் பதவி அலங்காரப் பதவி, ஆங்கிலேயரின் அடிமைச் சாசனத்தை நினைவுறுத்தும் பதவி, தேவையில்லாத ஒன்று என்று இன்று ஆளும் கட்சியில் இருப்பவர் கள் அன்று எதிர்க்கட்சியில் இருந்த நேரத்தில் கூறினார்களே, அப்படிப்பட்ட அந்தப் பதவி தேவை என்று இந்த அரசாங்கம் கருதுகிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தக் கண்டனக் குரலைப்பற்றித் தெரியாது. ஷெரிப் பதவி நம்முடைய உயர்நீதி மன்றத்தில் "Letters Patent Appeal" என்ற வகையில் இடம் பெற்றிருக்கிறது. "Letters Patent" அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே இடம் பெற்றிருக்கிறது. இதற்கு தனியாக விதிமுறைகள் கிடையாது. கன்வென்ஷனாகத்தான் வைத்திருக்கிறோம். அந்தக் காலத்தில் இருந்த அத்தனையையும் எடுத்து விடுவது என்று முடிவு செய்ய முடியாது. அது எடுப்பது தேவை என்று இந்த அரசாங்கம் கருதினால் அப்போது அதுபற்றி ஆலோசிக்கப்படும்.

Water from Red Hills lake

* 178 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether any complaints have been received to the effect that water from the Red Hills lake, solely intended for the City's drinking water purposes had been illegally let out for irrigation for five or six days in January, 1969; and

(*b*) if so, the action taken thereon and the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) செய்தித் தாள்களில் இந்தச் செய்தியைக் கண்டதும், புழலேரிக்கு உரிய நான்கு மதகுகளையும் நிர்வாகப் பொறியாளரும்,